பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**19 05 2026 TUESDAY 7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இந்தியா — நார்டிக் நாடுகள் இடையே பசுமை தொழில்நுட்பத்தில் ஒத்துழைக்க முடிவெடுத்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. தூய்மை இந்தியா இயக்கம், மக்கள் இயக்கமாக உருவெடுத்துள்ளதாக மத்திய அமைச்சர் திரு. மனோகர்லால் கூறியுள்ளார்.

3. நீட் நுழைவுத் தேர்வு வெளிப்படைத்தன்மையுடன் நடத்தப்படுவது உறுதி செய்யப்படும் என்று மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

4. ஆப்பிரிக்க நாடுகளின் வளர்ச்சிக்கு இந்தியா உறுதிபூண்டிருப்பதாக வெளியுறவுத்துறை இணையமைச்சர் திரு கீர்த்தி வர்தன் சிங் கூறியுள்ளார்.

5. ஆப்கானிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் மற்றும் ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் பங்கேற்க உள்ள இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

. இனி விரிவான செய்திகள் - -

<<<<<<>>>>>>

இந்தியா — நார்டிக் நாடுகள் இடையே பசுமை தொழில்நுட்பத்தில் ஒத்துழைக்க முடிவெடுத்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

நார்வே தலைநகர் Oslo-வில் நடைபெற்ற இந்தியா - நார்டிக் நாடுகளின் 3-வது உச்சிமாநாட்டுக்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மீன்வளத் துறையில் ஐஸ்லாந்து மற்றும் கடல்சார் பொருளாதாரத்தில் நார்வேயின் திறனை இந்தியா பயன்படுத்த உள்ளதாக கூறினார்.

ஸ்வீடன் நாட்டுடன் உற்பத்தி மற்றும் பாதுகாப்புத் துறையிலும், பின்லாந்து நாட்டுடன் தொலைத்தொடர்புத் துறையிலும், டென்மார்க்குடன் சைபர் பாதுகாப்புத் துறையிலும் ஒருங்கிணைந்து செயல்பட உள்ளதாக திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

தூய்மை இந்தியா இயக்கம், மக்கள் இயக்கமாக உருவெடுத்துள்ளதாக மத்திய அமைச்சர் திரு. மனோகர்லால் கூறியுள்ளார்.

புதுதில்லியில் தூய்மை இந்தியா இயக்கம் தொடர்பான ஆய்வுக் கூட்டத்தில் பேசிய அவர், நகர்ப்புறப் பகுதிகளில் இந்த இயக்கம் சிறப்பாக செயல்பட்டு வருவதாக தெரிவித்தார்.

இரண்டு நாட்கள் நடைபெறும் இந்த ஆய்வுக் கூட்டத்தில், தூய்மை இந்தியா இயக்கம் எதிர்கொள்ளும் சவால்கள், அதன் செயல்பாடுகள் மற்றும் பல்வேறு அமைச்சகங்கள் ஒருங்கிணைந்து செயல்படுவது உள்ளிட்டவை குறித்து விவாதிக்கப்படவுள்ளதாக அமைச்சர் கூறினார்.

<<<<<<>>>>>>

இளநிலை மருத்துவப் படிப்புகளுக்கான நீட் நுழைவுத் தேர்வு வெளிப்படைத்தன்மையுடன் நடத்தப்படுவது உறுதி செய்யப்படும் என்று மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நீட் தேர்வு தொடர்பான உயர்மட்ட ஆய்வுக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய அவர், நீட் தேர்வில் உள்ள குறைபாடுகளை அகற்ற அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளதாகவும் கூறினார்.

அடுத்த மாதம் நடைபெறவுள்ள நீட் மறு தேர்வை நேர்மையான முறையில் நடத்த உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் திரு தர்மேந்திர பிரதான் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

தில்லியில் சாலை வசதிகளை மேம்படுத்த பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

சோனா நெடுஞ்சாலை ஆறுவழிப்பாதையை ஆய்வு செய்தபின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தில்லி பகுதியில் **87** ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான ஆயிரத்து **850** கிலோமீட்டர் சாலைப் பணிகள் முடிவடைந்துள்ளதாக தெரிவித்தார்.

**13** ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான **225** கிலோமீட்டர் சாலைப்பணிகள் தற்போது நடைபெற்று வருவதாகவும் அவர் கூறினார்.

விரைவுச் சாலைகள், உயர்மட்டச் சாலைகள் மற்றும் சுரங்கப் பாதைகள் மூலம் தில்லியில் சாலை போக்குவரத்து நவீன மயமாக்கப்பட்டுள்ளதாகவும் திரு நிதின் கட்கரி தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

ஆப்பிரிக்க நாடுகளின் வளர்ச்சிக்கு இந்தியா உறுதிபூண்டிருப்பதாக வெளியுறவுத்துறை இணையமைச்சர் திரு கீர்த்தி வர்தன் சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் ஆப்பிரிக்க தினம் தொடர்பான மாநாட்டில் இன்று உரையாற்றிய அவர், இந்தியா — ஆப்பிரிக்கா இடையே வளர்ச்சி, பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இணைந்து செயல்பட்டு வருவதாக கூறினார்.

ஆப்பிரிக்க நாடுகளின் திறன் மேம்பாட்டிற்கும், கட்டமைப்பு, நிலையான வளர்ச்சி, நிர்வாக சீர்திருத்தம் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் மேம்பாட்டிற்கு இந்தியா ஒத்துழைப்பு அளிக்கும் என்று திரு கீர்த்தி வர்தன் சிங் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின்போது முப்படை வீரர்கள் ஒருங்கிணைந்து செயல்பட்டதாக ராணுவ தலைமை தளபதி ஜென்ரல் உபேந்திர துவிவேதி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் பாதுகாப்புத் தொடர்பான கருத்தரங்கில் இன்று உரையாற்றிய அவர், நமது முப்படை வீரர்கள் பாகிஸ்தான் தீவிரவாத கட்டமைப்புகளை துல்லியமாக தாக்கி அழித்ததாக கூறினார்.

தேசிய நலனுக்காக அமைதியை நிலைநாட்டி, வளர்ச்சியை அதிகரிக்க வேண்டும் என்று ஜென்ரல் உபேந்திர துவிவேதி அறிவுறுத்தினார்.

<<<<<<>>>>>>

கேரளம் மாநிலத்தின் நிதிநிலைமை குறித்து வெள்ளை அறிக்கை தயார் செய்ய சிறப்புக்குழு அமைக்கப்பட உள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு **V D** சதீசன் தெரிவித்துள்ளார்.

அம்மாநில முன்னாள் அமைச்சரவைச் செயலர் டாக்டர் கே என் சந்திரசேகரன் தலைமையிலான இந்தக் குழுவில், கூடுதல் தலைமை செயலர் திரு ஜோதிலால், பொருளாதார நிபுணர்கள் டாக்டர் நாராயணன், டாக்டர் வீரமணி உள்ளிட்டோர் இடம்பெறுவார்கள் என்று திரு V D சதீசன் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

நடப்பாண்டு கரீப் பருவத்திற்கு தேவையான உரங்கள் தடையின்றி தமிழகத்திற்கு வழங்க வேண்டும் என்று மத்திய அரசை, தமிழக முதலமைச்சர் திரு விஜய் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதுதொடர்பாக, பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு இன்று அவர் எழுதியுள்ள கடிதத்தில், நடப்பு கரீப் பருவத்தில் மொத்த சாகுபடி பரப்பில் 40 சதவீதமான 25 லட்சம் ஏக்கரில் சாகுபடி செய்வதற்கு தேவையான உரங்கள் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

இதற்காக, மூன்று லட்சத்து 83 ஆயிரம் மெட்ரிக் டன் யூரியா, ஒரு லட்சத்து 5 ஆயிரம் மெட்ரிக் டன் DAP மற்றும் 83 ஆயிரம் மெட்ரிக் டன் பொட்டாஷ் உரங்களை உடனடியாக தமிழகத்திற்கு வழங்கிட பிரதமர் உத்தரவிட வேண்டும் என்று, திரு விஜய் அந்த கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

<<<<<<>>>>>>

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி அமைப்பு மற்றும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் சார்பில் பொதுமக்கள் குறைதீர் முகாம் வரும் 27-ஆம் தேதி நடைபெற உள்ளதாக மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், தமிழகத்தின் மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம், தேனி, விருதுநகர் மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் நடைபெறவுள்ள முகாமில், பொதுமக்கள் தங்களது கோரிக்கைகள் மற்றும் சந்தேகங்களுக்கு தீர்வுகாணலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த முகாமில் பங்கேற்க விரும்புவோர் இணையதளம் வாயிலாக பதிவு செய்து கொள்ளலாம் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

தமிழகத்தின் திருப்பத்தூர் மாவட்டத்தில் காவல்துறை சார்பில் சைபர் கிரைம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

ஏலகிரிமலை கோடை கொண்டாட்டத்தை முன்னிட்டு நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் 200-க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(Voice Byte — அனுராதா - 47 Sec. )*

<<<<<<>>>>>>

நோய்களை ஏற்படுத்தக்கூடிய வெறிநாய் மற்றும் ஆபத்தான தெரு நாய்களை கருணை கொலை செய்வதற்கு உச்சநீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.

உச்சநீதிமன்ற நீதிபதிகள் திரு விக்ரம் நாத், திரு சந்தீப் மேத்தா, திரு என் வி அஞ்சாரியா, ஆகியோரைக் கொண்ட அமர்வு, தெரு நாய்களை கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளது.

மாநகராட்சி மற்றும் நகராட்சிகள் தெரு நாய்களை கட்டுப்படுத்த வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளது.

தெருநாய்களால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக வந்த ஊடக செய்திகளையடுத்து, உச்சநீதிமன்றம் தாமாக முன்வந்து இந்த வழக்கு விசாரணையை கடந்த ஆண்டு தொடங்கியது.

<<<<<<>>>>>>

உத்தராகண்ட் மாநில முன்னாள் முதலமைச்சரும், பிஜேபி மூத்த தலைவருமான **B C Khanduri** டேராடூனில் இன்று காலமானார். அவருக்கு வயது **91.**

முன்னாள் ராணுவ மேஜர் ஜென்ரலான **Khanduri** இரண்டு முறை உத்தராகண்ட் முதலமைச்சராகவும், மத்திய சாலை போக்குவரத்துத்துறை அமைச்சராகவும் பதவி வகித்துள்ளார்.

அவரது மறைவையொட்டி, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், ராணுவத்தில் சிறப்பாக பணியாற்றிய மேஜர் ஜென்ரல் **Khanduri**, மத்திய அமைச்சராகவும், உத்தராகண்ட் முதலமைச்சராகவும் சிறப்பாக செயலாற்றியதாக கூறியுள்ளார்.

குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், தங்க நாற்கர சாலைத் திட்டம், தேசிய நெடுஞ்சாலைத் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள், **Khanduri**-யின் தொலைநோக்கு பார்வையை பிரதிபலிப்பதாக புகழஞ்சலி செலுத்தியுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், மேஜர் ஜென்ரல் **Khanduri** தமது முதலமைச்சர் பதவிக்காலத்தில் உத்தராகண்டின் வளர்ச்சிக்காக சிறப்பாக பணியாற்றியதாக கூறியுள்ளார்.

மக்களவைத் தலைவர் திரு ஓம். பிர்லா வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், உத்தராகண்டின் வளர்ச்சிக்காகவும், நாட்டு நலனுக்காகவும் மேஜர் ஜென்ரல் **Khanduri** தமது வாழ்க்கையை அர்ப்பணித்ததாக கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

ஆப்கானிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் மற்றும் ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் பங்கேற்க உள்ள இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

சுப்மன் கில் தலைமையிலான டெஸ்ட் கிரிக்கெட் அணியில் ரிஷப் பந்துக்கு பதிலாக, கே எல் ராகுல் துணைத்தலைவராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

இந்தியா — ஆப்கானிஸ்தான் இடையேயான டெஸ்ட் கிரிக்கெட் போட்டி அடுத்த மாதம் **6-**ஆம் தேதி **Mullanpur-**ல் தொடங்குகிறது.

தரம்சாலா, லக்னோ மற்றும் சென்னையில் இரு அணிகளுக்கும் இடையே மூன்று ஒருநாள் கிரிக்கெட் போட்டி நடைபெறவுள்ளன.

---------------

உலக கோப்பை **Sepak Takraw** போட்டியில் இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

**<<<<<<END>>>>>>**